**பதியத்தலாவ பிரதேச சபை**

**அம்பாறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 யூன் 09 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 யூன் 18 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 சனவரி 06 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பதியத்தலாவ பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

2014 சனவரி 27 ஆந் திகதிய பீஎல்/05/பீடீ/இபொகநி ஆம் இலக்க உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சுச் செயலாளரின் சுற்றறிக்கையின் பிரகாரம் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடை வைப்புப்பாதிவேட்டு மீதி ரூபா 60,000 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 90,000 ஆக அதாவது ரூபா 30,000 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்ட இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 1,463,200 ஆக இருந்ததுடன் அந்தப் பெறுமதி ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரியின் அடிப்படையில் வரித்தொகையின் மீதி ரூபா 11,040 ஆக இருந்த போதிலும் அது ரூபா 5,280 ஆக அதாவது ரூபா 5,760 தொகை குறைவாக ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்குச் செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 86,287 ஆக இருந்த போதிலும், அது ரூபா 79,996 ஆக அதாவது ரூபா 6,291 தொகை குறைவாக ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) கடை வாடகை பதிவேட்டின் படி மீளாய்வாண்டில் கடை வாடகை வருமானம் ரூபா 508,775 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 620,800 ஆக அதாவது ரூபா 112,025 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) பொதுக் களஞ்சியம் மற்றும் கண்காணிப்பாளரின் பிரதேச களஞ்சியமாக பல வருட காலமாக ரூபா 114,240 தொகை நடைமுறைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த களஞ்சியங்களின் பௌதீக ரீதியில் அந்த இருப்பு காணப்படவில்லை. அதனால் நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்துக்கள் அந்தப் பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.3 செலுத்தவேண்டிய கணக்குகள்

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி சேவையின் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு பல வருடகாலமாகச் செலுத்தவேண்டிய ரூபா 367,245 தொகையான பங்களிப்புப் பணத்தைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு பல வருட காலமாக செலுத்த வேண்டிய பெறுமதிசேர் வரி ரூபா 11,040 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 80,287 தொகை என்பவற்றை செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இண்மை

-----------------------------------------------------------------

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் அந்தப் பெறுமதியை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக பரீட்சிப்பதற்கோ அல்லது சான்றுறுதிப்படுத்துவதற்கோ முடியாதிருந்தது.

| விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| வேலைக் கடன்கொடுத்தோர் | 14,411,530 | வேலைக் கடன்கொடுத்தோர் பதிவேடு, மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| வேலைக் கடன்பட்டோர் | 14,753,219 | வேலைக் கடன்பட்டோர் பதிவேடு, மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |
| ஏனைய வருமான நிலுவை | 24,115 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் |

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

---

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** |
| --- | --- |
| **பிரதேச சபையின் விதிக் கோவை** | |
| விதி 59-66 | சபைப் பிரதேசத்தில் மெய்மையாய்வை மேற்கொண்டு கைத்தொழில் வரி அறவிடவேண்டிய கைத்தொழில்களை இனங்காணப்பதற்கும் வரியினை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |
| விதி 153 | வருமான நிலுவைப் பணம் தொடர்பான கூற்றொன்று பீ.எஸ். 07 படிவத்தின் பிரகாரம் பிரதேச சபையினால் பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| விதி 180 | காசு, களஞ்சியம் மற்றும் வருமானச் சேகரிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களினால் சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிணை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 114,770 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 955,834 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 841,064 அதிகரிப்பொன்று காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 5,000 | - | - |
| (ii) | வாடகை | 3,629,600 | 1,325,076 | 250,070 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 510,000 | 478,595 | - |
| (iv) | சேவைக்கான கட்டணம் | 670,000 | 583,968 | - |
| (v) | பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும் | 783,000 | 1,074,071 | 202,059 |
| (vi) | ஏனைய வருமானம் | 61,000 | 58,845 | 24,115 |

## 2.2.2 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 131,600 தொகை பதிவாளர் நாயகத்திடமிருந்தும், நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 70,499 தொகை கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து பெறப்பட வேண்டியிருந்ததுடன் அந்தத் தொகைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 3.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு
(இ) கடன்பட்டோர் கட்டுப்பாடு
(ஈ) பதிவேடுகளைப் பேணிச் செல்லல்